




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ ஜனவரி. 29, 2023 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 115 ❖ ரூ.10


## தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகள் மும்மொழிக் கொள்கைகளைதான் கடைபிடிக்கிறது

# தொலைநோக்கு

## தமிழ்நாடு அரசு - தேசிய கல்விக் கொள்கை, மும்மொழி கொள்கையை அமல்படுத்த வேண்டும் அப்போதுதான் தேசிய அளவில் தரமான கல்வியை பெறுவார்கள் : கே.ஆர்.நந்தகுமார்



**புதுக்கோட்டை, ஜன. 29- தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிகுலேஷன், மேல்நிலை மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகள் சங்கத்தின் புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட பள்ளி நிர்வாகிகள் கோரிக்கை விளக்க மாநாடு புதுக்கோட்டையில் நேற்று நடைபெற்றது.**

புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் சண்முகநாதன் வரவேற்புரையாற்றினார். ராமநாதபுரம் மாவட்டத் தலைவர் சண்முகம், புதுக்கோட்டை மாவட்ட பொருளாளர் குமரன்,ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் செல்லத்துரை அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார், மாநில பொது செயலாளர் கே.ஆர்.நந்தகுமார் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றுகையில்,

10 ஆண்டுகளுக்கு மேல் நடைபெறும் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கிட வேண்டும், பள்ளி கட்டடங்களுக்கு சொத்து வரியில் இருந்து விளக்கு அளிக்க வேண்டும், விண்ணப்பித்து காத்து உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தொடர் அங்கீகாரம் வழங்கிட வேண்டும்,விண்ணப்பித்து காத்துள்ள அனைத்து பள்ளிகளுக்கும் டிடிசிபி அனுமதி வழங்கிட வேண்டும், ஆர்டிஇ கல்வி கட்டணம் உடனே கிடைத்திட வேண்டும், அனைவருக்கும் ஒரே மாதிரியான நியாயமான கல்வி கட்டணம் நிர்ணயத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதனைதொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து கூறுகையில், தமிழ்நாட்டில் தேசிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழி கொள்கையை அமல்படுத்த வேண்டும், அப்போதுதான் தேசிய அளவிலான தரமான கல்வியை தமிழ்நாடு மாணவர்கள் பெறுவார்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ள தனியார் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கைகள் தான் கடைபிடிக்கப்படுகிறது, தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் மது மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர், தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இதனை கட்டுப்படுத்த வேண்டும், ஆசிரியர்களால் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முடியவில்லை,

தனியார் பள்ளிகளில் மாணவர்களின் கல்வி கட்டணத்தை கூடுதல்படுத்தி ஒரே அளவிலான கல்வி கட்டணத்தை பெற தமிழக அரசு வழிவகை செய்ய வேண்டும், தனியார் பள்ளிகளை நடத்துவதற்கும் அனுமதி பெறுவதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் பல்வேறு துறை அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவல நிலை தொடர்கிறது இதை அரசு களைய வேண்டும், தமிழ்நாட்டில் ஏற்கனவே 20,000 தனியார் பள்ளிகள் செயல்பட்டு வரும் நிலையில் புதிதாக ஆயிரம் பள்ளிகளுக்கு அரசு உடனடியாக அங்கீகாரம் வழங்க வேண்டும். அந்த பள்ளிகளுக்கு அனைத்து தகுதிகளும் இருந்தும் அங்கீகாரம் வழங்காமல் அரசு காலம் தாழ்த்தி வருவது வேதனை அளிக்கிறது. கள்ளக்குறிச்சி பள்ளி விவகாரத்தில் தனியார் பள்ளி கூட்டமைப்புகள் போராட்டம் நடத்திய பின்பு தான் தாமதமாக அரசு நடவடிக்கை எடுத்தது, இந்த விவகாரத்தில் இதுவரை பள்ளி கல்வித்துறை இயக்குனர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொள்ளாதது வருத்தம் அளிக்கிறது என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநாட்டை வாழ்த்தி ஜோனதன், நாகராஜன், கருப்பையா, தவசீலன், ஜெயக்குமார், ரமேஷ், மகாதேவன், சரவணகுமார், இராஜா, சையது கமாலுதீன், ஆகியோர் உரையாற்றினர். சுரேஷ்குமார், மதியழகன், அருள், இளங்கோவன், முஜிபுர் ரஹ்மான், பழனிச்சாமி ஆகியோர் விழாவினை ஒருங்கிணைத்தனர் ராமநாதபுரம் மாவட்ட பொருளாளர் செந்தில்குமார் நன்றியுரையாற்றினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, கலைஞர் கருணாநிதி நகரில் அமைந்துள்ள அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள புதிய ஒப்புயர்வு மையக் கட்டிடத்தை திறந்து வைத்து, சிகிச்சை பெற்று வருபவர்களிடம் சிகிச்சை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியன், மேயர் பிரியா, எம் எல் ஏ பிரபாகரராஜா, துணை மேயர் முகேஷ் குமார், சுகாதாரத் துறையில் முதன்மை செயலாளர் செந்தில்குமார், திட்ட இயக்குனர் உமா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## அரசு பொதுத்தேர்வு அட்டவணை வெளியீடு

தமிழ்நாட்டில் நடப்பு கல்வி ஆண்டிற்கான பொது தேர்வுகள் 12 ஆம் வகுப்பிற்கு மார்ச் மாதம் 13ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் மூன்றாம் தேதி வரையிலும், 11ம் வகுப்புக்கு மார்ச் 14ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 5-ம் தேதி வரையிலும், 10ம் வகுப்பிற்கு ஏப்ரல் 6ஆம் தேதி துவங்கி 20ம் தேதி வரையிலும் பொது தேர்வுகள் நடத்தப்படும் என பள்ளி கல்வித்துறை ஏற்கனவே அறிவித்துள்ளது. அதன்படி தமிழக அரசு அறிவித்திருக்கும் கால அட்டவணையை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதுகை வரலாறு சார்பில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கும் தேர்வு கால அட்டவணையை புதுகை வரலாறு நிறுவனர் & ஆசிரியர் சு. சிவசக்திவேல் வெளியிட புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட தமிழ்நாடு நர்சரி பிரைமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கே.ஆர். நந்தகுமார் பெற்றுக்கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.


# கண்ணீர் அஞ்சலி



புதுக்கோட்டை செந்தில் மருத்துவமனையின் நிறுவனர்
டாக்டர்.சுப்பையா அவர்களின் சம்மந்தியும்,
புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி
மருத்துவமனையின் பேராசிரியர் மற்றும்
எலும்புமுறிவு சிகிச்சை பிரிவின் தலைமை மருத்துவர்
டாக்டர்.ராஜ்மோகன் அவர்களின்
தந்தையுமான ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர்

**திரு.A.குருசாமி அவர்கள்**

நேற்று 28.01.2023 இயற்கை எய்தினார்.
அன்னாரின் இறுதி ஊர்வலம் நாளை 30.01.2023 திங்கட்கிழமை
மதியம் 12.00 மணிக்கு மேல் புதுக்கோட்டை,
15, சண்முகநகரில் ( டி.வி.எஸ் அருகில் )
உள்ள அவரது இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்...

வருத்தத்துடன்

**குடும்பத்தார்கள் மற்றும் உறவினர்கள்**
**செந்தில் மருத்துவமனை - புதுக்கோட்டை.**

# இன்று

29-1-2023

அஷ்டமி

வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம், திராட்சை மூன்றும் உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

சக வருடம் 1944 மாகம் 09

| சுபகிருது தை 15 | JAN - SUN ஞாயிறு | ரஜப் 6 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 029 / 336 | |

வளர். அஷ்டமி 20.39 (மா. 02.52) பரணி 47.09 (கா. 01.28) தியாஜ் 10.34 அகஸ் 28.54 சித்த. காஞ்சி உலகளந்த பெருமாள் கெருட வாகனத்தில் வீதியுலா. குன்றக்குடி முருகப் பெருமான் வெள்ளி கேடயத்தில் புறப்பாடு. வைத்தீஸ்வரன் கோவில் செல்வமுத்துக் குமாரசுவாமி உற்சவாரம்பம்.

| | நல்லநேரம் | கௌரி.நல். | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 1.30-2.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |


சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; மகர லக்னம் இருப்பு நா. 2 வி. 43; சந்திராஷ்டமம் ஹஸ்தம் சித்திரை

கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.36

ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

| இராசி | பலன் |
|---|---|
| மேஷம் | உற்சாகம் |
| ரிஷபம் | சினம் |
| மிதுனம் | முயற்சி |
| கடகம் | தெளிவு |
| சிம்மம் | சிக்கல் |
| கன்னி | பக்தி |
| துலாம் | நிம்மதி |
| விருச்சி | சாந்தம் |
| தனுசு | இன்பம் |
| மகரம் | நலம் |
| கும்பம் | நற்செயல் |
| மீனம் | பக்தி |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்






தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,345 | Rs.5,707 |

# அரியலூர் நகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு சான்று வழங்கல்

அரியலூர்,ஜன.29-

அரியலூர்நகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு சான்றிதழ்வழங்கப்பட்டது.

குடியரசுதினவிழாவை முன்னிட்டு அரியலூர் நகராட்சி அலுவலக ஆணையர் பொறுப்பு தமயந்தி முன்னிலையில், நகராட்சி தலைவி சாந்தி கலைவாணன் தேசிய கொடி ஏற்றி வைத்து, அரியலூர் நகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய, சுகாதார அலுவலர் வில்லவன் உள்ளிட்ட பலருக்கும்,சான்றிதழ்களை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.



அரியலூர் நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, நகராட்சி கவுன்சிலர்கள் ராஜேஷ், புகழேந்தி, ராணி சந்திரசேகர், அருண் கலைவாணன், நகராட்சி அலுவலர்கள் செந்தில்குமார், குணசேகரன், சுரேஷ், ஆர்.ஐ., ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், குடியரசு தின விழாவை ஒட்டி, ஒன்றிய குழுத் தலைவர்செந்தமிழ்ச்செல்வி தேசியக்கொடி ஏற்றினார், வட்டார வளர்ச்சி அலுவலர் குணசேகரன், ஒன்றிய துணைச் சேர்மன் சரஸ்வதி ஜெயவேல் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தன், ஒன்றிய குழு உறுப்பினர் கடுகூர் முருகேசன் மற்றும் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

# அரியலூர் பகுதியில் குடியரசு தின கிராம சபை கூட்டம்

அரியலூர்,ஜன.29-

அரியலூர் பகுதியில் குடியரசு தின கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன.



கடந்த நிதியாண்டு முதல், 2022 டிசம்பர் 31ஆம் தேதி முடிய உள்ள காலத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது செலவினம் குறித்து விவாதித்தல், ஊராட்சி தணிக்கை அறிக்கையினை கிராம சபையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெறுதல் உள்பட, பல்வேறு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்ட, கிராம சபை கூட்டங்கள் அரியலூர் மாவட்டம் முழுமையும் நடைபெற்றது.

அரியலூர் ஊராட்சி ஒன்றியம், எருத்துக்காரன்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட, அமீனாபாத் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற, குடியரசு தின கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்றத் தலைவர் சிவா என்கிற பரமசிவம் தலைமை வகித்தார், ஊராட்சி செயலாளர் கோவிந்தசாமி தீர்மானங்களை படித்தார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வராஜ், வார்டு உறுப்பினர்கள் அர்ஜுனன், வெங்கடேசன், தனம், மகேஸ்வரி, உஷா தேவி, தேவிகா, சித்ரா மற்றும் அரசு துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கோவிந்தபுரம் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்றத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார், ஊராட்சி செயலாளர் குமாரி தீர்மானங்களை படித்தார். இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அம்பிகா, வார்டு உறுப்பினர்கள் வளர்மதி, சிவக்குமார், செந்தில் முருகன், கர்ணன், நீலாவதி, கிராமப் பிரமுகர் அண்ணாதுரை, மற்றும் கிராம பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

ஓட்ட கோவில் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, ஊராட்சி மன்ற தலைவர் செங்கமலை தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் சத்தியசீலன் தீர்மானங்களை படித்தார். ஓட்டக்கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட, கூத்தூர் மற்றும் கிருஷ்ணாபுரம் கிராமங்களை பிரித்து, தனி ஊராட்சியாக செயல் படுத்த வேண்டும் என, சம்பந்தப்பட்ட கிராம மக்கள் கொடுத்த மனு அடிப்படையில், கிராம சபை கூட்டத்தில் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வி, காண்ட்ராக்டர் ராமலிங்கம், மற்றும் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தாமரைக் குளம் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் பிரேம்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் முத்து தீர்மானங்களை படித்தார். வார்டு உறுப்பினர்கள் சுமதி இளங்கோவன், நீலமேகம், செல்லம் வைத்தியநாதன், ஷர்மிளா இளையராஜா, மற்றும் கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.

வாலாஜா நகரம் ஊராட்சி மன்றத் தலைவர் அபிநயா இளையராஜா தலைமையில், வாலாஜா நகரம் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில், ஊராட்சி செயலாளர் தமிழ் குமரன் தீர்மானங்களை படித்தார். மக்கள் நலப் பணியாளர் அன்பழகன், வார்டு உறுப்பினர்கள் பிரியதர்ஷினி, ஆனந்த், சாந்தி, சரோஜா, கனிமொழி, ரங்கசாமி, அருள் பிரசாத், லதா, மற்றும் கிராம பொதுமக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து



தென்காசி, ஜன.29-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் சுந்தரேசபுரத்திற்கு புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து தென்காசியில் இருந்து சுந்தரேசபுரத்திற்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் பா.சுரேஷ் தலைமையில், முன்னாள் வடக்கு மாவட்ட திமுகசெயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான,மா. செல்லதுரை முன்னிலையில், தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் ஒன்றிய அவைத்தலைவர் பூரண சந்திரன், போக நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் குரு சண்முகப்பிரியா, மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழி, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன்தினேஷ், சங்கனா பேரி கிளைக் கழக செயலாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தங்க பாண்டியன், சுந்தரேசபுரம் கிளை கழக செயலாளர் காளி பாண்டி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, முருகானந்தம், நல்லையா,சுந்தரேசபுரம் ராஜேந்திரன், சிங்கிலி பட்டிஆ. மணிகண்டன், மற்றும்கிளைக் கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில், காது மூக்கு தொண்டை பிரிவு தொடர் கல்வி பயிலரங்கம் நடைபெற்றது

**புதுக்கோட்டை, ஜன.29-**

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் காது,மூக்கு, தொண்டை பிரிவு சார்பாக தொடர் கல்வி பயிலரங்கம்.அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது மருத்துவக் கல்லூரி துணைமுதல்வர் மருத்துவர் சி. உமையாள் தலைமைதாங்கினார் கல்லூரி மருத்துவக் கல்வி ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் .வாசுகி முன்னிலை வகித்தார்.



இந்த பயிலரங்கத்தில் தனலட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் மருத்துவர். ரவீந்திரன் மற்றும் தஞ்சை மருத்துவக் கல்லூரியின் இணை பேராசிரியர் மருத்துவர். கணேஷ்குமார் காது,மூக்கு ,தொண்டை சம்பந்தமாக நோயாளிகளை எவ்வாறு பரிசோதனை செய்வது, நோய்களை எப்படி கண்டறிவது மற்றும் நோய்களை எவ்வாறு குணப்படுத்துவது என்பது பற்றி மாணவர்களுக்கு விரிவாகஎடுத்துக்கூறினர். மருத்துவர்.ராஜாகணேஷ் தேர்வுக்கு செல்லும் முன் மாணவர்கள் தன்னை எவ்வாறு தயார் படுத்துவது,தேர்வினை எழுதுவது பற்றி விவரமாக எடுத்துக் கூறினார்.

மருத்துவக் கல்வி தொடர் பயிலரங்கம் காது,மூக்கு, தொண்டை பிரிவின் பேராசிரியர் மருத்துவர் தங்கராஜ், துணை பேராசிரியர் மருத்துவர்.ராஜாகணேஷ், உதவி பேராசிரியர் மருத்துவர் க.ஆறுமுகம் மற்றும் மருத்துவர்கள் ராயப்பன், குமார், அருணகிரி,புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் அனைத்து துறை பேராசிரியர்கள், துணைபேராசிரியர்கள், உதவிபேராசிரியர்கள்பயிற்சி மருத்தவர்கள் மற்றும் காது ,மூக்கு,தொண்டை பிரிவில் தேர்வு எழுதவிருக்கும் அனைத்து மாணவ, மாணவிகள்உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர், நிறைவாகஉதவிபேராசிரியர் மருத்துவர் க.ஆறுமுகம் நன்றிகூறினார்.

# தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் ஜனவரி 31-ம் தேதி கால்நடை முகாம் நடைபெற உள்ளது

தென்காசி,ஜன.29-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் புளியங்குடி நகராட்சிக்கு உட்பட்ட சிந்தாமணியில் வரும் 31-1-2023 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் நடைபெற இருக்கிற கால்நடை முகாமினை புளியங்குடி நகராட்சி மன்றத் தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன், துணைத் தலைவர் எ.அந்தோணிசாமி துவக்கி வைக்கிறார்கள்.

அதனை தொடர்ந்து புளியங்குடி நகராட்சி சிந்தாமணி கண்ணா மெட்ரிகுலேஷன் பள்ளியில் ரேபிஸ் எனும் வெறி நோய் தடுப்பு, மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தென்காசி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இம் முகாமில் தென்காசி கோட்ட உதவி இயக்குனர் மகேஸ்வரி சந்திரசேகர் அவர்களும், புளியங்குடி நகராட்சி ஆணையாளர், வாசுதேவநல்லூர் ஒன்றிய கால்நடை உதவி மருத்துவர்களும், கால்நடை மருத்துவ உதவியாளர்களும், மற்றும் புளியங்குடி நகராட்சி அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர், பொதுமக்கள் தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணிகளை கொண்டு வந்து வெறி நோய் தடுப்பூசி முகாமிற்கு தடுப்பூசி செலுத்திக்கொண்டு பயன் பெறுமாறு கால்நடை பராமரிப்பு, மற்றும் புளியங்குடி நகராட்சி சார்பிலும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# ஈரோடு வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் நடைமுறைகள் குறித்து ஆட்சியர் அறிவிப்பு

ஈரோடு, ஜன. 29 -

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக வங்கியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் கிருஷ்ணனுண்ணி தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கலெக்டர் கிருஷ்ணனுண்ணி தெரிவித்ததாவது, இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட தேர்தல் செலவினங்கள் குறித்த தொகுப்பில் வங்கி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் நடத்தை விதிமுறைகளான தேர்தல் நோக்கத்திற்காக வங்கி கணக்குகளை தொடங்குவதற்காக வங்கிகள் உடனடி சேவையை வழங்கவும், பண பரிவர்த்தனைக்கு பிரத்யேக கவுண்டர்களை திறப்பதற்கும் முன்னுரிமை அடிப்படையில் சேவை வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது

வங்கிகளால் அவுட்சோர்சிங் செய்யப்பட்ட ஏஜென்சிகள் ஏ.டி.எம் களில் பணம் நிரப்புவதற்கு செல்லும் போது வங்கிகளால் வழங்கப்பட்ட கடிதங்கள், ஆவணங்கள் எடுத்துச் செல்லவும், அவுட்சோர்சிங் பணியாளர்கள் அந்தந்த ஏஜன்சிகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லவும், பணமதிப்பு விபரங்கள் அடங்கிய தொகுப்பினையும் எடுத்துச்செல்லவும் தேர்தல் நடைமுறை விதிகளை கடைப்பிடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் நடைமுறை விதிகள் அமுலில் உள்ள நேரத்தில் வழக்கத்திற்கு மாறான, சந்தேகத்திற்கிடமான பண பரிவர்த்தனைகள் வங்கிகள் மூலமாக நடைபெற்றாலோ, பல நபர்களின் வங்கி கணக்குகளுக்கு ஆர்.டி.ஜி. எஸ். மூலம் பணப்பரிமாற்றம் நடைபெற்றாலோ, வேட்பாளர்கள், அவர்களது மனைவி அல்லது அவரை சார்ந்தவர்களின் வங்கிக்கணக்கில் இருந்து ரூ.1 லட்சத்திற்கு அதிகமான ரொக்க டெபாசிட் அல்லது ரொக்கத்தை திரும்ப பெறுதல் போன்ற பண பரிவர்த்தனைகள் இருந்தாலோ, வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப் படுவதற்கான சந்தேகத்திற்கிடமான பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப் பட்டாலோ மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு தகவல் அளிக்க அனைத்து வங்கி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ரூ.10 லட்சத்திற்கு மேலான பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் போது வருமான வரித்துறை தேர்தல் மேற்பார்வை அலுவலருக்கு தகவல் தெரிவிக்கவும் வங்கி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) கணேஷ், குருநாதன் (கணக்குகள்), தேர்தல் தாசில்தார் சிவகாமி, விஜயகுமார் (தாசில்தார், பேரிடர் மேலாண்மை), வங்கியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் 74-வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி உடற்கல்வி இயக்குனர் குமரேச சீனிவாசன் வரவேற்புரையாற்றினார், கல்லூரி முதல்வர் கண்ணன் கொடியேற்றி, மாணவ, மாணவியர்களிடையே தன்னம்பிக்கை, விடாமுயற்சி,கடின உழைப்பு இருந்தால் தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்றும் இந்தியாவை வல்லரசாக்குவதில் மாணவர்களின் பங்கு முக்கியமானது என்றும் ஊக்கப்படுத்திப் பேசினார். விழாவில் கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர், இவ்விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக மாணவர்களிடையே சிலம்பம் போன்ற பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன, தமிழ்த் துறைப் பேராசிரியர் பட்டாபிராமன் நன்றியுரையாற்றினார்.

## அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கொத்தமங்கலம் கிராமம் கிழக்கு சேர்வை தெருவில் வசித்து வந்த தற்போது RPL காலணி, கூவக்காடு (PO) குளத்துபுழா (TK) கொல்லம் (DT) கேரளாவில் தற்போது வசித்து வரும் முத்தையா மனைவி வீட்டுக்குடித்தனம் வயது சுமார் 80 உள்ள செங்கமலம் ஆகிய எனது கட்சிக்காரர் கீரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திர பதிவு எண் 789/1993 உள்ள பத்திரத்தை ஜெராக்ஸ் நகல் எடுப்பதற்கு கொத்தமங்கலம் கடை தெருவிற்கு கொண்டு சென்ற போது 01/12/2022 ஆம் தேதி தொலைந்து விட்டது. இது தொடர்பாக ஆன்லைன் மூலமாக காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. CMA23011282 மேற்காணும் கிரைய பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தரவும். இந்த கிரைய பத்திரத்தை தவறாக பயன்படுத்துபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**T.வளர்மதி B.A.,B.L., அட்வகேட் & நோட்டரி பப்ளிக்**
**புதுக்கோட்டை மாவட்டம்**

# மல்லியங்குப்பம் கிராமத்தில் இளம்பெண்ணை தாக்கி கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு வாலிபர்கள் சிறையில் அடைப்பு

**ஊத்துக்கோட்டை, ஜன. 29 -**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், மல்லியங்குப்பம் ஊராட்சியை சேர்ந்த ஏரிக்கரை தெருவில் வசித்து வருபவர் உதயகுமார் (வயது30) காய்கறி வியாபாரி. இவரது மனைவி மாலதி (வயது26).





மாலதி மட்டும் வீட்டில் தனியாக இருந்தார். இதனை அறிந்த மர்ம நபர் ஒருவர் முகத்தை மூடிய வண்ணம் ரெயின் கோட் அணிந்து கொண்டு வந்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டார். இதன் பின்னர் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றார்.

பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன், ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் தியாகராஜன் மற்றும் போலீசார் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு குற்றவாளியை தேடி வந்தனர்.

இந்நிலையில், உதயகுமாரின் பங்காளி மகன் மல்லியங்குப்பம் வேலன் தெருவில் வசித்து வரும் அருண்குமார் (வயது22) என்பவர் மீது ஆரணி காவல் நிலைய தனி பிரிவு காவலர் குமரவேலுக்கு சந்தேகம் ஏற்பட்டது. எனவே, போலீசார் நேற்று முன் தினம் அருண்குமாரை அழைத்து வைத்து முறையாக விசாரணை மேற்கொண்டனர். அப்பொழுது அருண்குமார் மற்றும் அவரது நண்பர் ஜேபி (வயது24) ஆகியோர் கொள்ளை அடித்தது தெரியவந்தது.

அதே ஊரைச் சேர்ந்த அருண்குமார் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டால் யாருக்கும் சந்தேகம் வராது என்ற காரணத்தால் அருண்குமாரே இச்சம்பவத்தில் ஈடுபட்டாராம்.

இதன் பின்னர், போந்தவாக்கம் அரசு மதுபான கடை அருகே காத்திருந்த நண்பர் ஜேபியை அருண்குமார் சந்தித்துள்ளார். பின்னர், இருவரும் ஜேபி வீட்டிற்கு சென்று ரத்தக்கரையுடன் இருந்த ஆடைகளை மாற்றிக்கொண்டு ஒன்றும் தெரியாததை போன்று அருண்குமார் மட்டும் மல்லியங்குப்பம் பகுதியிலேயே சுற்றி திரிந்துள்ளார்.

இருப்பினும் போலீசார் தன்னை பிடித்து விட்டனர் என்று அருண்குமார் கூறினாராம். எனவே, அவர் கொடுத்த தகவலின் படி தங்க நகைகளையும், ரொக்க பணத்தையும் போலீசார் மீட்டனர். மேலும், ஜேபியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். இதன் பின்னர், குற்றவாளிகள் இருவர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து கும்மிடிப்பூண்டி குற்றவியல் நீதிமன்றம் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து புழல் சிறையில் அடைத்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தில்லையாடியில் உள்ள தியாகி தில்லையாடி வள்ளியம்மையின் நினைவு மண்டபத்தை தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் மாவட்ட துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமுர்த.விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திமுகவுக்கு தாவப்போவது இல்லை ஈரோடு கிழக்கு தேமுதிக வேட்பாளர் பரபரப்பு

ஈரோடு, ஜன. 29 –

ஈரோடு கிழக்கு தொகுதியில் தே.மு.தி.க. தனித்து போட்டியிடுகிறது. வேட்பாளராக மாநகர் மாவட்ட செயலாளர் ஆனந்த் அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் தே.மு.தி.க. வேட்பாளர் ஆனந்த் தி.மு.க.வுக்கு தாவப்போவதாக தகவல்கள் வெளியானது.



இதுகுறித்து ஆனந்திடம் கேட்டபோது, விஜயகாந்த் கட்சி ஆரம்பித்த காலத்தில் இருந்தே 2005-ம் ஆண்டு முதல் நான் தே.மு.தி.க.வில் இணைந்து பணியாற்றி வருகிறேன். கட்சியின் கிளை செயலாளர் பொறுப்பில் இருந்து பல்வேறு பொறுப்புகளை வகித்து உள்ளேன். கட்சி தலைவர் விஜயகாந்த், பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் என் மீது முழுக்க முழுக்க நம்பிக்கை வைத்துள்ளனர். பெரிய பெரிய கட்சிகளே வேட்பாளரை அறிவிக்க தயக்கம் காட்டும் நிலையில் தே.மு.தி.க. தனித்து போட்டியிடுவதாக அறிவித்து என்னை வேட்பாளராக அறிவித்து உள்ளனர். நானும் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி விட்டேன். இந்த நிலையில் எனது பெயரை கெடுக்க மாற்று கட்சிக்கு செல்வதாக கூறுவது வதந்தி. இதில் கொஞ்சம் கூட உண்மை இல்லை எனவும் அவர் கூறினார்.

# எஸ்.ஆர்.எம். வேளாண் கல்லூரி மாணவிகள் வரைபடம் வரைந்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

செங்கல்பட்டு, ஜன. 29 –

செங்கல்பட்டு மாவட்டம், ஒரத்தி ஊராட்சியில் எஸ்.ஆர்.எம் வேளாண் கல்லூரியில் பயின்று வரும் மாணவிகள் வரைபடம் வரைந்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



ஒரத்தி கிராமத்தில் பழைய போலிஸ் ஸ்டேஷன் தெருவில் நான்காம் ஆண்டு பயின்று வரும் மாணவிகள் கிராமத்தில் தங்கி வேளாண் பயிலுதல் என்ற தலைப்பின் கீழ் கிராமப்புற மதிப்பீட்டில் கிராமத்தின் வளங்கள் மற்றும் குறைகள் குறித்து சாலையில் வரைபடமாக வரைந்து காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் அ.ஜெ.சுருதிவர்ஷினி, ச.சிவதர்ஷினி, கி.இதழி, சிவபிரித்தி, ர.ப.ரஹ்ஷன்யா, ஆனந்த வர்ஷினி, ர.காவியா, பவானி, வ.நிவேதா, த.அபிதா ஆகியோர்களுடன் கிராம விவசாயிகள் இணைந்து கலந்துரையாடி அங்குள்ள விவசாயத்தின் குறை நிறைகள், ஊரின் ஒட்டுமொத்த இயக்கத்தை வரைபடமாக வரைந்து கிராம விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மாணவிகள் புள்ளிவிவரத்துடன் வரைபடம் வரைந்து காட்டியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

# திருவேற்காடு அருகே அமைந்துள்ள பொன்னியம்மன் ஆலய கும்பாபிஷேக விழா

சென்னை , ஜன. 29 –

திருவேற்காடு, நகராட்சிக்கு உட்பட்ட வீரராகவாரத்தில் அமைந்துள்ள பொன்னியம்மன் ஆலய கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கோவில் சுமார் 450 வருடம் பழமை வாய்ந்த கோவில் ஆகும் வீரராகவபுரம் கிராம பொதுமக்கள் பொன்னியம்மனை குலதெய்வமாக வழிபாடு செய்து வருகின்றனர்.



கும்பாபிஷேகம் முடிந்தவுடன் சுவாமி அலங்கரித்து பின்பு தீபாராதனை நடைபெற்றது, பக்தர்கள் ஊர் பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் வேதாச்சலம் நாயக்கர், காடுவெட்டி சங்கர், மற்றும் துர்காராம் ஆகியோர் கும்பாபிஷேக விழாவினை சிறப்பாக செய்திருந்தார்கள்.

இக்கோவில் கும்பாபிஷேக தினத்தன்று நூற்றுக்கும் அதிகமான அகோரி சாதுக்கள் கலந்து கொண்டனர். அவர்கள் கூறும் கோரிக்கை தமிழக முதல்வர் மு. க.ஸ்டாலின் மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு திருவண்ணாமலை கோவில் அதிகாரிகளிடமும் வேண்டுகோளாக திருவண்ணாமலையில் அண்ணாமலையார் இடத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி உள்ளது, சமீபத்தில் மூன்று நாட்களுக்கு முன்பு காலை 8 மணி முதல் இரவு 10 மணிக்குள் பக்தர்கள் தங்க அனுமதி உண்டு அதற்கு மேல் அனுமதி இல்லை என்று ஆலய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

டூரிசம் எனப்படும் சுற்றுலா பக்தர்களுக்கு சரிவரும் சிவன் அடியார் அகோரிகள் சாதுக்கள் இவர்களுக்கு சாத்தியமாகுமா, சிவன் அடியார்களுக்கு 24 மணி நேரம் வேண்டும் அதற்கு அவகாசம் தருமாறு அகோரி சாதுக்கள் கோரிக்கையாக தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் கவனத்திற்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு பத்திரிக்கை மற்றும் ஊடக வாயிலாக பணிவுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காரைக்கால் அருகே மோட்டார் சைக்கிளை திருடிய இருவர் கைது

காரைக்கால், ஜன. 29 –

காரைக்காலை அடுத்த திரு.பட்டினம் சட்டையபிள்ளைத்தெருவில் வசிப்பவர் வைரவசுந்தரம். இவர் தனது ரூ.40 ஆயிரம் மதிப்பிலான மோட்டார் சைக்கிளை, வழக்கம் போல், கடந்த 22ந் தேதி வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு, உள்ளே சென்றார். பின்னர் மீண்டும் வெளியே வந்த பார்த்தபோது, மோட்டார் சைக்கிள் மாயமாகியிருந்தது.





நண்பர்கள் உதவியுடன் பல இடங்களில் தேடியும் கிடைக்காததால், நேற்று முன்தினம் திரு.பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்த இன்ஸ்பெக்டர் லெனின் பாரதி, எஸ்.ஐ.சுரேஷ் மற்றும் போலீசார் மோட்டார் சைக்கிளை திருடிய மர்ம நபரை தேடிவந்தனர். இந்நிலையில், நண்பர் ஒருவருடன், மேலையூர் சாரயக்கடை அருகில், சென்றபோது, திருடு போன மோட்டார் சைக்கிள் அருகில் 2 பேர் நிற்பதை கண்டு, நண்பருடன் சென்று விசாரித்தபோது, இருவரும் முன்னுக்கு பின் முறனாக பதில் கூறியுள்ளனர்.

பின்னர், அங்கிருந்த மற்ற சிலரது உதவியுடன் இருவரையும் பிடித்து விசரித்தபோது, கடந்த 22ந் தேதி தனது மோட்டார் சைக்கிளை திருடியதை ஒப்புகொண்டனர். பின்னர், 2 நபர்களையும், மோட்டார் சைக்கிளையும் திரு.பட்டினம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசார் விசாரணையில், திரு.பட்டினம் காமாச்சி அம்மன் கோவில் தெருவைசேர்ந்த சிவசுப்பிரமணியன்(54), அவரதுநண்பர் வாழ்மங்களம் தோப்புத்தெருவைச் சேர்ந்த இளையராஜா(40) என்பது தெரியவந்தது. பின்னர் திருட்டில் ஈடுபட்ட 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தலைமையில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வாக்குச்சாவடி மையம் அமைவிட மாற்றம் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினம் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் சிவகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) கணேஷ், குருநாதன் (கணக்குகள்) உட்பட பலர் இருந்தனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அமமுக சார்பில் சிவபிரசாந்த் போட்டியிடுவார் என அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் அறிவித்துள்ளார். இவர் அமமுக ஈரோடு மாநகர கிழக்கு மாவட்ட செயலாளராக உள்ளார். எ.எம்.சிவபிரசாந்த் இன்று முதல் தேர்தல் பரப்புரை பணிகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.



தமிழகத்தில் நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில், அஇஅதிமுக சார்பில் இடைக்காலப் பொதுச்செயலாளர், முன்னாள் முதல்வர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமி அறிவிக்கும் வேட்பாளர் அதிக வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற வேண்டி அனைத்துலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன் நாகூர் தர்காவில் சிறப்பு பிரார்த்தனை செய்து, 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். தென் சென்னை வடக்கு-கிழக்கு அம்மா பேரவை மாவட்ட தலைவர் வழக்கறிஞர் குலாம் நபி ஆசாத் அருகில் உள்ளார்.



எஸ்.ஆர்.எம். வேளாண்மை கல்லூரியின் வேளாண் துறையில் இளம் அறிவியல் 4 ஆம் ஆண்டு படிக்கும் மாணவிகள், பேராசிரியர்கள் ராஜசேகரன், நிஷா தலைமையில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் மதுராந்தகம் ஒன்றியம் கிராமத்தில் தங்கியுள்ள மாணவர்கள் சக்தி ஸ்வேத்தா, வினிதா, பவதாரணி, சுப்ரா, தீபிகா, சுஜிதா, புவனேஸ்வரி, மோனிகா ஸ்ரீ, திவ்யா, தீபா மற்றும் கிராம விவசாயிகள் இணைந்து நடத்திய பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டில் கிராமத்தின் வளங்கள் மற்றும் குறைகள் குறித்து சாலையில் வரைபடமாக வரைந்து காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.





ஈரோடு மாவட்டம் சித்தோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் முருகையா ஈரோடு போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு வந்துவிட்டு மீண்டும் சித்தோடு போலீஸ் நிலையத்திற்கு செல்வதற்காக போலீஸ் ஜீப்பில் சென்று கொண்டிருந்தார். மேட்டூர் சாலை முனிசிபல் காலனி பிரிவு அருகே சென்று கொண்டிருந்தபோது குறுக்கே மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் வந்ததால் அவர்கள் மீது மோதாமல் இருப்பதற்காக ஜீப்பை திருப்பி உள்ளார். அப்போது கட்டுப்பாட்டினை இழந்த ஜீப் சாலையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த டிவைடர் மீது மோதி நின்றது. இதில் ஜீப்பின் வலதுபுறம் முன்பகுதி பலத்த சேதமடைந்தது. நல்ல வேளையாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதையடுத்து கிரேன் கொண்டு வரப்பட்டு ஜீப் மீட்கப்பட்டது.





நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அ.அருண்தம்புராஜ், தலைமையில் நடைபெற்றது.

# அதிமுக வை தோற்கடிக்க முடியாது சரியான முறையில் உழைத்தால் வெற்றி நிச்சயம்

## தேர்தல் பொருப்பாளர்களிடம் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு

ஈரோடு, ஜன. 29–

ஈரோட்டில் கிழக்கு தொகுதி அ.தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் மிகப்பெரிய வெற்றி சரித்திரம் படைக்க வேண்டும். மக்கள் பாராட்டுகிற அளவுக்கு தொகுதி பொறுப்பாளர்கள் பணி செய்ய வேண்டும். இரு பெரும் அரசியல் தலைவர்கள் கற்றுக்கொடுத்த அரசியலை இந்த தொகுதியில் பயன்படுத்தி மிகப்பெரிய சரித்திர வெற்றியை பெற வேண்டும். கட்சிக்காரர்கள் எங்கு இருந்தாலும் அவர்களது உணர்வுகள் கிழக்கு தொகுதி நோக்கி இருக்கும்.

2 ஆண்டு ஆட்சிகாலத்தில் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு ஒரு துரும்பை கூட தி.மு.க. கிள்ளி போடவில்லை. தி.மு.க.காரர்கள் கூனி குறுகிதான் வாக்கு சேகரிக்க முடியும். அ.தி.மு.க.காரர்கள் நெஞ்சை நிமிர்த்தி வாக்கு சேகரிக்கலாம்.5-ல் ஒரு பகுதி ஆட்சி முடிந்த பிறகும் முக்கிய திட்டங்கள் எதையும் தி.மு.க. அரசு செயல்படுத்தவில்லை.

அ.தி.மு.க. செயல்படுத்திய தாலிக்கு தங்கம், திருமண உதவித்தொகை திட்டங்களை கூட தி.மு.க.வினர் நிறுத்தி விட்டனர். ஈரோடு மாநகராட்சி மக்களுக்கு 485 கோடியில் செயல்படுத்தப்பட்ட ஊராட்சி கோட்டை குடிநீர் திட்டத்தை அ.தி.மு.க. கொண்டு வந்த ஒரே காரணத்துக்காக தி.மு.க. நிறுத்துகிறது. மருத்துவ கல்லூரியில் 7.5 சதவீத இடஒதுக்கீடு கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு. இதனால் 564 பேர் மருத்துவ கல்லூரியில் படித்து வருகின்றனர். அவர்களின் மருத்துவ படிப்பு செலவுகளையும் அ.தி.மு.க. ஏற்றது.

தி.மு.க. ஆட்சியில் வெல்லத்தை உள்ளூரில் கொள்முதல் செய்தால் கமிஷன் பெற முடியாது என்பதால் வெளி மாநிலத்தில் இருந்து வெல்லத்தை பெற்று பயன்படுத்த முடியாத வெல்லத்தை வழங்கினார்கள். திராவிடமாடல்என்பதுஅதி.மு.க. கொண்டு வந்த திட்டங்களை நிறுத்துவதுதான். மூன்று நாட்களுக்குள் வாக்காளர்கள் விவரங்களை தொகுதி பொறுப்பாளர்கள் சரிபார்க்க வேண்டும். நமக்கு சோதனை புதிதல்ல. பல சோதனைகளை வென்ற இயக்கம். சிலர் எப்படியாவது அ.தி.மு.க.வை தோற்கடிக்க வேண்டும் என நினைக்கிறார்கள். ஆனால் அ.தி.மு.க.வை தோற்கடித்த வரலாறு இல்லை. நாம் சரியான முறையில் உழைத்தால் வெற்றி நிச்சயம் என்று தொண்டர்களிடம் உற்சாகமாக பேசினார் .

## வேலூரில் சிலம்பம் சுற்றி சாதனை

# ஆஸ்கார் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற மாணவ, மாணவிகள் முயற்சி

வேலூர், ஜன. 29 –

வேலூர் மாவட்டம், கரசமங்கலம் கிராமம் துளசி மஹாலில் டிசம்பர் 29, 30 ஆம் தேதி உலக சாதனை முயற்சி நடைபெற்றது.



இதில் கலந்து கொண்ட ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் சிலம்ப கலைகூடம் மாணவ மாணவிகள் மணிமேகலை (23) கண்களை கட்டிக்கொண்டு தொடர்ச்சியாக 20 மணி நேரம் இரட்டை கம்பு சுற்றியும், எழிலரசி (14) தொடர்ச்சியாக 20 மணி நேரம் ஒற்றை கம்பு சுற்றியும் நிஷா (10) 6 மணி நேரம் சிலம்பம் சுற்றியும் சாதனை புரிந்து உள்ளனர்.

கோகுல்ராஜ் (13) 2 மணி நேரம் கோக்கொலி கட்டை கட்டிக்கொண்டு சிலம்பம் சுற்றி அசத்தி உள்ளார். பரத் (15), டில்லிபாபு (14) தொடர்ச்சியாக 12 மணி நேரம் சிலம்பம் சுற்றி சாதனை படைத்துள்ளார்.

சாதனை புரிந்த மாணவ மாணவிகளை டிஜிபி சைலேந்திரபாபு பாராட்டி வாழ்த்துக்கள் கூறினார். இச்சாதனைக்கு உறுதுணையாக இருந்த ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் சிலம்ப கலைக்கூட ஆசான் ஆனந்தகுமார், ரவுத்திரம் பழகு வளரி ஆசான் சுரேஷ் இருவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார். இவர்களுடன் பெற்றோர் பூபதி ராஜா, சக்தி பூபதி ராஜா கலந்து கொண்டனர்.

# சென்னையில் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

சென்னை , ஜன. 29 –

சென்னை, கோயம்பேடு, சீனிவாச நகர் 2வது தெருவில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம், நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான சுக்லபக்ஷ பஞ்சமி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் மீன லக்னத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.



அதனைத்தொடர்ந்து, தீபாராதனை, மூலவருக்கு விசேஷ அபிஷேகம், சோடச உபச்சாரம், மகா தீபாராதனை மற்றும் அன்னதானம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கும்பாபிஷேக திருப்பணி குழு அறங்காவலர் தலைவர் பி.லக்ஷ்மி நாராயணன், நிர்வாக அறங்காவலர் பி.ஆர். கிரிதர், அறங்காவலர் (நிதி) சி.ஜெ.ரவீந்திரன், ஆலய அறங்காவலர் குழுவினர் பானுமதி பாஸ்கரன், கே.எம்.ஏழுமலை, கே.எம் கிருஷ்ணன், எம்.மாணிக்கவேல், ஆர்.செல்வமணி, எல்.சி.டி.இராஜேந்திரன், ஜி.இலட்சுமணபெருமாள், வி.ரமணி உள்ளிட்டோர் சிறப்பாகசெய்திருந்தனர். ஆலய புனருத்தாரண பணிகளை நூற்றுக்கும் மேலான ஆலயங்களை புனரமைத்த ஸ்தபதி எஸ்.செல்வம் சிறப்பாக செய்திருந்தார்.

## பொருத்திருந்து பாருங்கள்

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் குறித்து செங்கோட்டையன் பேட்டி

ஈரோடு, ஜன. 29 –

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் எம்.எல்.ஏ. ஈரோட்டில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,



எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வழியில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சந்திக்கும் முதல் இடைத்தேர்தல் இது. ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் முடிவை எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். தலைமையில் திண்டுக்கல்லில் நடந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்றது போன்று இந்த தேர்தலிலும் எடப்பாடி தலைமையில் வெற்றி பெறுவோம். இந்த தேர்தல் ஒரு மாற்றத்தை தமிழகத்தில் உருவாக்கி காட்டும். அ.தி.மு.க. கூட்டணியில் யார், யார் இருக்கிறார்கள்? என்பதை எடப்பாடி பழனிசாமி இன்னும் 3 நாட்களில் அறிவிப்பார்.

98.5 சதவீதம் பேர் ஒரே அணியில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் செயல்படுகிறோம். இந்த தேர்தலில் சரித்திர வெற்றி பெறுவோம். இதனை நம்பி நாங்கள் தேர்தல் களத்தில் இறங்கி இருக்கிறோம். எங்களது வேகம், விவேகம் மக்களை சந்திக்கும் விதம் போகபோக உங்களுக்கே தெரியும். இன்று முதல் எடப்பாடி பழனிசாமி உத்தரவின் பேரில் ஈரோடு கிழக்குதொகுதி முழுவதும் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து வருகிறோம். அவர்கள் மனநிலை குறித்தும் தெரிந்து வருகிறோம் என்று கூறினார்.

இடைத்தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி உங்களுக்கு ஆதரவு அளிக்குமா என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு, பொறுத்திருந்து பாருங்கள் என்றார். இரட்டை இலை சின்னம் உங்களுக்கு கிடைக்குமா என்ற கேள்விக்கும் பொறுத்திருந்து பாருங்கள் என்றார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் திருவள்ளுவர் இளைஞர் மன்ற திருவள்ளுவர் தின விழா பொங்கல் விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் இப்போது இளைஞர்களின் சேவையை பாராட்டி இவர்களும் ஊராட்சி ஒன்றிய தலைவர் ஆனால் திருவரங்குளத்தில் மூன்று கோடி ரூபாயை விளையாட்டு அரங்கம் அமைத்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிப்பு செய்தார். அதன்படி அதற்கான இடத்தை தேர்வு செய்வதற்கான பணிகளை மேற்கொண்டு திருவரங்குளம் நந்தவனம் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் அமைப்பதற்காக இடம் பார்வையிட்டார் அவருடன் ஆலங்குடி தாசில்தார் செந்தில் நாயகி மற்றும் வருவாய் துறை அதிகாரிகள், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர், மேற்கண்ட இடத்திற்கான ஆவணங்களை சரி பார்த்து அதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

# தமிழ் மாநில ஊரகவாழ்வாதார இயக்கத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்



புதுக்கோட்டை, ஜன.29–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே உள்ள பெருநாவலூர் அரசு கலைக்கல்லூரியில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்பட்டு வரும் DDUGKY மூலம் மாபெரும் இளைஞர்வேலைவாய்ப்பு முகாம் ஆவுடையார் கோவில் அருகே உள்ள பெருநாவலூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சி ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் உமாதேவி தலைமையில் நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் ரேணுகாதேவி மற்றும் உதவி திட்ட அலுவலர் அமுதா ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்,

தமிழ் பேராசிரியர் மோகனா பயிற்சியில் கருத்துரை வழங்கினார், கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பற்றி முத்துக்கிருஷ்ணன் உரை வழங்கினார், சுய வேலைவாய்ப்பு தரும் பயிற்சியின் மைய பயிற்றுனர்ஜெயந்திபடித்த வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் பற்றியும், நிகழ்ச்சியில் 45க்கும்மேற்பட்ட வேலை வாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டு வேலை வாய்ப்பு பற்றி ஆலோசனை வழங்கினர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களும், பெண்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர், இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் முத்துலட்சுமி, உமா மகேஸ்வரி, சத்தியா, ஆனந்தி, லட்சுமி பிரபா, ஆரோக்கியமேரி ஆகியோர் ஒருங்கிணைத்தனர், இறுதியில் வேலை வாய்ப்பு பேராசிரியர் அனிதா அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அம்மாக்கு உடம்பு சரியில்லை என்று சென்னையில் அடகு கடைகளில் போலி நகை கொடுத்து ஏமாற்றிய நபர் கைது



சென்னை,ஜன,29

சென்னை புது வண்ணாரப் பேட்டை, வெங்கடேசன் தெருவை சேர்ந்த மணிகண்டன் மற்றும் மணலி புதுநகரை சேர்ந்த சிவா ஆகியோர், நேற்று புது வண்ணாரப்பேட்டையில் உள்ள நரேஷ் ஜுவல்லரி மற்றும் சோகன் லால், பாபுலால், ஆகியோரின் ஜெயின் அடகு கடைகளில் சென்று தாய் உடல் நிலை சரியில்லை என்றும் அறுவைசிகிச்சை செய்ய பணம் தேவைப்படுகிறது என்றுகூறி ஆதார் அட்டை மற்றும் ஆவணங்கள் கொடுத்து சுமார் 50கிராம் எடையுள்ள நகைகள் அடமானம் வைத்து ஒரு லட்சத்து 84,000 ஆயிரம் ரூபாய் பணத்தை வாங்கி சென்றுள்ளனர். பின்பு நகை கடையில் நகையை பரிசோதனை செய்தபோது போலி நகைகள் என தெரியவந்து.

இதனையடுத்து அடகு கடை உரிமையாளர்கள் புதுவண்ணாரப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சிசிடிவி கேமிரா காட்சிகளை கைப்பற்றினர்.

இதனையடுத்து புதுவண்ணாரப்பேட்டை மார்க்கெட் பகுதிய மணிகண்டனை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர் மேலும் தலைமறைவாக உள்ள சிவா தேடி வருகின்றனர்

# புதுக்கோட்டை பாலன் நகரில் சிறப்பு கால்நடைமருத்துவ முகாம்



புதுக்கோட்டை ,ஜன.29–

புதுக்கோட்டை பாலன் நகரில் நடைபெற்ற சிறப்பு கால்நடை மருத்துவ முகாமை ஊராட்சி மன்ற தலைவர் பாபு துவக்கி வைத்தார்.

புதுக்கோட்டை பாலன் நகரில் அரசு பள்ளி வளாகத்தில் சிறப்பு கால்நடை மருத்துவமுகாம் ஊராட்சி மன்ற தலைவர் பாபு தலைமையில் நடைபெற்றது. முகாமில் 500க்கும் மேற்பட்ட ஆடு, மாடு, நாய் உள்ளிட்ட கால்நடைகளுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை செயற்கை கருவூட்டல், குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, மலடு நீக்க சிகிச்சை, தாது உப்பு கலவைவழங்குதல், தீவனப் பயிர், தீவன புல் சாகுபடி பற்றிய விளக்கம் சிறு சிறு அறுவை சிகிச்சைகள். கோழிகளுக்கும் மற்றும் நாய்களுக்கு தடுப்பூசி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் கால்நடைகளுக்கு வழங்கப்பட்டது.

இது தவிர முகாமில் கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் வகையில் ஆரோக்கியமான பசுக்கள் மற்றும் காளைகளுக்கு சிறப்பு விருது, சிறந்த கால்நடை பராமரிப்பாளர்களுக்கான விருது சிறந்த கிடாரி வளர்ப்போருக்கான விருதுகள் வழங்கப்பட்டது.

இந்த முகாம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. நிகழ்ச்சியில் பேசிய பொதுமக்கள் பாலன் நகர் பகுதியில் இருந்து நோயுற்ற கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. இங்கு இருந்து பல கிலோமீட்டர் தொலைவுகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டி உள்ளது. இந்த சிறப்பு முகாம் பயனுள்ளதாக இருந்தது விரைவில் இந்த பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். முகாமில் கால்நடை மருத்துவர்கள் டாக்டர்கள் தினேஷ்குமார், விக்னேஷ், ஆய்வாளர் ஜெயசீலா, சுமதி, அப்பகுதியை சேர்ந்த சிவயோகமலர், ரங்கசாமி, இந்து, பாஸ்கர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# மனிதநேயமிக்க போக்குவரத்து காவலர் முத்துவேலுக்கு விவசாயிகள் பாராட்டு



பொன்னமராவதி, ஜன.29–

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் இருந்து திருப்பத்தூர் செல்லும் பிரதான சாலையில் போக்குவரத்து ஆய்வாளர் சத்தியநாதன் தலைமையிலான காவலர்கள் தலைக்கவசம் குறித்த முக்கியத்துவத்தை இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு எடுத்து கூறிய நிலையில். அவ்வழியாக வந்த விவசாயி ஒருவர் வைகோலை தனது இருசக்கர மிதிவண்டியில் எடுத்துச் சென்ற நிலையில் திடீரென மயங்கி விழுந்த முதியவரை பார்த்த போக்குவரத்து காவலர் முத்துவேல் அவரது இருசக்கர மிதிவண்டியை சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் தள்ளி சென்று வைகோலையும் விவசாயியையும் அவரது இல்லத்திற்கு பாதுகாப்பாக கொண்டு சென்றதை அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோரை பாராட்டி வருகின்றனர்.

# கந்தர்வகோட்டை அருகே கோவிலூர் பொது விநியோக அங்காடியில் குடும்ப அட்டை பதிவு செய்யும் கருவி கோளாறு

## பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அவல நிலை



கந்தர்வகோட்டை, ஜன.29–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை பகுதியில் 1500 க்கும் மேற்பட்ட குடும்பதாரர்கள் வசித்து வருகின்றனர், மேலும் கந்தர்வகோட்டை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் இரண்டு பொது விநியோக அங்காடிகள் செயல்பட்டு வருகிறது. கோவிலூர் பொது விநியோக அங்காடியில் 800-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய், சீனி, மண்ணெண்ணெய் உள்ளிட்டவைகளை வாங்க செல்லும் பொழுது தொடர்ச்சியாக குடும்ப அட்டை பதிவு செய்யும் கருவி கோளாறு ஏற்படுவதாலும் போதுமான பணியாளர்கள் இல்லாததாலும் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருந்து பொருட்களை வாங்கி செல்லும் அவல நிலை ஏற்பட்டு வருகிறது.

தொடர்ச்சியாக குடும்ப அட்டை மற்றும் கைரேகை பதிவு செய்யும் கருவி கோளாறு ஏற்படுவதால் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருந்தும் பொருட்களை வாங்க முடியாமல் வரிசையில் நின்று ஏமாற்றம் அடைந்து வருகின்றனர், தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு குடும்ப அட்டை பதிவு செய்யும் கருவிகளை விரைவில் சரி செய்து தரக்கோரியும் மேலும் கூடுதலாக பொது விநியோக அங்காடியில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்ட அளவிலான 8 ஆவது தேக்வாண்டோ போட்டியில் 250 மாணவர்கள் பங்கேற்பு



புதுக்கோட்டை,ஜன.29–

புதுக்கோட்டை மாவட்ட அளவிலான 8 ஆவது தேக்வாண்டோ போட்டி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக வளாகத்தில் உள்ள தேர்வுக் கூட அரங்கில் நடைபெற்றது. போட்டிக்கு வந்திருந்த அனைவரையும் போட்டி அமைப்புச் செயலாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றுப் பேசினார். தேக்வாண்டோ விளையாட்டு சங்க மாவட்டத் தலைவர் மாரிமுத்து தலைமை தாங்கினார், தேக்வாண்டோ விளையாட்டு சங்க மாவட்ட கௌரவத் தலைவர் ஏவிஎம். கார்த்திக் முன்னிலை வகித்தார்.

போட்டியினை தொடங்கி வைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மணிவண்ணன் பேசினார்,

புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் ரமேஷ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் செந்தில்குமார், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி, அருள்மிகு பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இராஜேந்திரன், மாவட்ட உடற்கல்வி அலுவலர் தங்கராஜ், பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி, குரு. மாரிமுத்து, இல்லம் தேடி கல்வி திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

போட்டியில் அரசுப்பள்ளி, தனியார் பள்ளி மற்றும் கிளப்பைச் சேர்ந்த 250 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர், போட்டியில் முதல் 2 இடங்களை பிடித்த மாணவ, மாணவியர்கள் அடுத்த மாதம் கன்னியாகுமரியில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள உள்ளனர். போட்டியின் முடிவில் தேக்வாண்டோ விளையாட்டு சங்க மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் அஹம்மது நன்றி கூறினார்.



புதுக்கோட்டை வைரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 34 ஆம் ஆண்டு விழாவில் புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் கவிதா ராமு, திருச்சி ரயில்வே போலீஸ் சூப்பிரண்டு செந்தில்குமார் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகள் மற்றும் கடந்த அரசு பொது தேர்வுகளில் மாவட்ட, மாநில அளவில் சாதனை படைத்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தனர். அருகில் பள்ளியின் நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்கள் உள்ளனர்.

# சங்கம் விடுதி ஊராட்சியில் சுகாதாரத் துறை சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மருத்துவ முகாம்



புதுக்கோட்டை, ஜன.29–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் சங்கம்விடுதி ஊராட்சியில் டெங்கு காய்ச்சல் பாதித்த பகுதியில் புதுநகர் வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் .மணிமாறன் உத்தரவுப்படி மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் நடமாடும் மருத்துவ குழு மருத்துவர் மருத்துவர் . சசிவர்மன் தலைமையிலான குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

இந்த முகாமில் சங்கம்விடுதி ஊராட்சி மன்றத் தலைவர் பெருமாள், சுகாதார ஆய்வாளர் பழனிச்சாமி, ஊராட்சி செயலர் காளிமுத்து மற்றும் சுகாதார ஆய்வாளர் தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர், முகாமில் 48 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது, வீடுகள் தோறும் புகைமருந்து அடிக்கப்பட்டது, முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது, தூய்மை பணியாளர்களை கொண்டு மேல்நிலை நீர் தேக்க தொட்டி சுத்தம் செய்தும் வீடுதோறும் களப்பணி மேற்கொள்ளப்பட்டது.

# புதுக்கோட்டை கற்பக விநாயகா மெட்ரிக் பள்ளியில் ஆண்டுவிழா கொண்டாட்டம்




புதுக்கோட்டை, ஜன.29–

புதுக்கோட்டை கற்பக விநாயகா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பதினென்றாம் ஆண்டு ஆண்டுவிழா நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக விஜய் டிவி புகழ் நகைசுவை நடிகர் சரத்குமர் பங்கேற்று விழாவினை சிறப்பித்தார். இவ்விழாவினையும் பள்ளியின் செயலாளர் சுப்பிரமணியம் தலைமையேற்று நடத்தினார், அறங்காவலர் கவிதா சுப்ரமணியம் சிறப்புரையாற்றினார், அவர்தம் ஆற்றிய உரையில் மாணவர்களே வாழ்க்கையில் தன்னலத்தோடு இல்லாமல், பிறர் நலனையும் கருத்தில் கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்தால் நமக்கு நன்மைகள் அனைத்தும் கிடைக்கும் என்ற கருத்தமைந்த கதையைக் கூறி பிறருக்கு உதவி செய்யுங்கள் என அறிவுரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் சரத்ராஜ் அவர் ஆற்றிய உரையில் பள்ளிக்கூடம் என்பது திறமையை வளர்த்துக்கொள்ளும் இடம் ஆசிரியர், பெற்றோர் சொல்வதை கேட்டால் வாழ்வின் குறிக்கோளை அடைந்து விடலாம். “ஒரு ஆசிரியர் என்பவர் ஆயிரம் பெற்றோர்களுக்கு சமம்” என்ற உயரிய கருத்தினை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார், மேலும் முதல் மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள், பரிசுகளை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றன, நிகழ்ச்சியின் இறுதியாக ஆசிரியர் மு.ராஜா மற்றும் ஆசிரியை நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

# புதுக்கோட்டை குளத்தூர் மகாத்மா மழலையர் பள்ளியில் மாறுவேடப் போட்டி



புதுக்கோட்டை, ஜன.29–

புதுக்கோட்டை குளத்தூர் மகாத்மா மழலையர் தொடக்கப்பள்ளியில் மாறுவேடப் போட்டி நடைபெற்றது, பள்ளியின் தாளாளர் டி,ரவிச்சந்திரன் தலைமைதாங்கினார், ஆசிரியை சுஹாசினி அனைவரையும் வரவேற்றார். விழாவில் குழந்தைகள் மாணவ மாணவியர்கள் தனித் திறமைகளாக தேசத் தலைவர்கள் மகாத்மா காந்தி பாரதியார் சுபாஸ்சந்திரபோஸ் மருத்துவர் கலெக்டர், காவல்துறை அதிகாரி, ஆசிரியர் மற்றும் சிவபெருமான், முருகன், கருப்பர் கிருஷ்ணன், ராதை விவசாயி உள்ளிட்ட வேடமணிந்தும் விண்வெளி, 108 ஆம்புலன்ஸ், செல்போன் செயல்பாடுகள் பற்றியும் விளக்கமளித்தும் நூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் மகிழ்ச்சியுடன் போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

நடுவர்களாக கல்வியாளர்கள் பழனிச்சாமி, சித்தார்த்தன் ,தனலெட்சுமி ,பிரசாந்தி, பேலஸ்சிட்டிரோட்டரி ராஜேந்திரன் போட்டியாளர்களுக்கு மதிப்பெண் வழங்கி தேர்வு செய்தனர், போட்டியில் பங்கு பெற்ற அனைத்து மழலையர்கள் , மாணவர்களுக்கும் நினைவு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள் ஆசிரியைகள் சத்யா, சுஹாசினி, ரம்யா, வித்யா, புவனேஸ்வரி, சண்முகபிரியா, சுபத்திரை, கேசனவள்ளி ,புவனேஸ்வரி மற்றும் மாணவ ,மாணவிகள். பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியைகள் சிறப்புடன் செய்தனர் நிறைவாக பள்ளியின் ஆசிரியை சுபத்திரை நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்ட அதிமுக அலுவலகத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பணி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# தனியார் பள்ளிகள் மும்மொழிக் கொள்கைகளை தான் கடைபிடிக்கிறது

# அடகு கடைகளில் போலி நகையை கொடுத்து ஏமாற்றியவர் கைது





# திருவள்ளூர்: பெண்ணை தாக்கி கொள்ளை 2பேர் சிறையில் அடைப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 29.01.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**மார்க்கண்டு சுவாமிகள்** , யாழ்ப்பாணம் யோகசுவாமிகளின் துறவுச் சீடர் (பி.1899) (இ.1984)



**வி. வி. சடகோபன்** , கல்வியாளர், ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி.1915)



**ராஜேந்திர சிங்** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1922) (இ.2003)



**ராஜ்யவர்தன் சிங் ரத்தோர்** , இந்திய துப்பாக்கி சுடு வீரர், அரசியல்வாதி (பி.1970)



## இன்றைய நினைவு நாள்

**எஸ். வி. சுப்பையா** , தமிழ்த்திரைப்பட, நாடக நடிகர் (இ.1980)



**பிலு மோடி** , இந்திய அரசியல்வாதி (பி.1926) (இ.1983)



**பி. எஸ். பி. பொன்னுசாமி** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1908) (இ.1998)



**ஜார்ஜ் பெர்னாண்டஸ்** , இந்திய அரசியல்வாதி (பி.1930) (இ.2019)

